**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 144-2020**

**PW-2**

**பெயர் :** அனுசுயா

**க/பெ :** தங்கவேல்

**தேதி :** 28.11.2023

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 1ம் வாதி பாலகிருஷ்ணன் கேட்டதின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் வாதி பாலகிருஷ்ணன் இதற்கு முன்னதாக இந்து வித்யாலயா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி என்ற பெயரில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தார் என்றால் சரிதான். நான் அதில் ஆசிரியராக பணியாற்றினேன் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சேர்ந்து ஸ்ரீ வெற்றி விநாயக மெட்ரிக்குலேஷன் பள்ளி என்ற பெயரில் புழாங்குளத்தில் பள்ளி ஒன்றை நடத்தி வந்தனர் என்றால் சரிதான்.

2. 2015 - 2017 காலகட்டத்தில் 1ம் வாதி வெற்றி விநாயக பள்ளியில் தாளலராக இருந்த சமயத்தில் நான் அப்பள்ளியில் ஆசிரியராக பணியில் இருந்தேன் என்றால் சரிதான். 2017 பின்னிட்டு நான் மேற்படி பள்ளியில் ஆசிரியராக பணியாற்றவில்லை என்றால் சரிதான். 2019 காலகட்டத்தில் பாலகிருஷ்ணன் மற்றும் அவரது மகள் உரிய தொகையை பெற்றுக்கொண்டு மேற்படி கல்வி குழுமத்திலிருந்து ராஜினாமா செய்துவிட்டனர் என்றாலும், மேற்படி பள்ளிக்கு சொந்தமான சொத்துக்கள் சம்மந்தமாக உரிய பிரதிபலன் பெற்றுகொண்டு விடுதலை கொடுத்துவிட்டனர் என்றாலும், அவர்களுக்கும் அந்த பள்ளிக்கும் தற்போது சம்மந்தமில்லை என்றால் நான் கேள்விப்பட்டவரையில் அவர் உரிய பணத்தை இன்னும் வாங்கவில்லை. இந்த விபரம் 1ம் வாதி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு

நேரடியாக இந்த விபரங்கள் தெரியாமல் 1ம் வாதி கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2023.11.28 20:52:40 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.